# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
## முதலாம் தவணை மதிப்பீட்டு பரீட்சை – 2022

| தரம் - 9 | தமிழ்மொழியும் இலக்கியமும் | நேரம்: 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................................

**பகுதி - I**

❖ **மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. அகத்தில் ஒளி துலங்கிட வேண்டும். இங்கு **அகம்** என்பது
 1) மனை  2) வீடு  3) உள்ளம்  4) உள்

02. “பாலன் ஒரு கையாலாகாதவன்” என்று அவனது நண்பர்கள் கூறினர். இங்கு **கையாலாகாதவன்** என்பதன் பொருள்
 1) முயற்சி ஆற்றவன்  2) கைகள் இல்லாதவன்
 3) நோய்வாய்ப்பட்டவன்  4) ஒரு செயலைச் செய்ய இயலாதவன்

03. கடும் கோபம் பொங்கியதால் தண்டித்து விட்டேன். **கோபம்** என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
 1) சாந்தம்  2) சமாதானம்  3) மூர்க்கம்  4) சினம்

04. பாலிலே தண்ணீர் கலபப்து பாவம். இங்கு **பாவம்** என்பதன் எதிர்க்கருத்து.
 1) பரிதாபம்  2) சாபம்  3) புண்ணியம்  4) அபாவம்

05. அழகு, குதிரை, சிங்கம், விஷ்ணு என்ற பொருளைக் குறிக்கும் ஒரு சொல்
 1) அடி  2) அரி  3) ஏறு  4) அளை

06. பின்வருவனவற்றுள் பெயராயும் வினையாயும் அமையாத சொல்
 1) மறி  2) பார்  3) சிரி  4) கரை

07. நாற்பதாம் ஆண்டின் நிறைவில் கொண்டாடப்படும் விழா
 1) முத்து விழா  2) பொன்விழா  3) மாணிக்கவிழா  4) பவள விழா

08. **“வெள்ளை பூட்டி உழுதான்”** என்பதில் இடம்பெறும் ஆகுபெயர்
 1) குணவாகு பெயர்  21) காலவாகு பெயர்  3) பொருளாகு பெயர்  4) இடவாகு பெயர்

09. “தம்பி பந்தை அடித்தான்” என்பதில் அடித்தான் என்பது
 1) பிறவினை  2) தனிவினை  3) செயப்பாட்டு வினை  4) எச்சவினை

10. “காய் மாண்ட தெங்கின்.....” என்ற பாடல் இடம்பெறும் நூல்
 1) சிலப்பதிகாரம்  2) மணிமேகலை  3) சீவகசிந்தாமணி  4) கம்பராமாயணம்

11. தமிழ் நெடும் கணக்கிலுள்ள நெட்டெழுத்துக்களின் எண்ணிக்கை யாது?
 1) 72  2) 126  3) 07  4) 133

12. “நல்லெண்ணங்களைத் தேர்ந்தெடுங்கள்” என்ற கட்டுரை காணப்படும் நூல்
 1) நெஞ்சே அஞ்சாதே நீ  2) புதுப்புனல்  3) தமிழ் மரபு  4) வான்துளிகள்

13. பெயர் + பெயர் என்று அமைந்த கூட்டுப்பெயர் சொல்
 1) எழுதுகோல்  2) எறிகணை  3) எழுதுகருவி  4) வானவில்

14. **Digital** என்ற கலைச்சொல்லின் தமிழ் வடிவம்
 1) ஊடகம்  2) பண்பலை  3) பயனாளர்  4) எண்மானம்



kalvi.lk

15. தாழைக்கு மடல் என்பது போல கமுகுக்கு
1) இலை 2) கூந்தல் 3) தாள் 4) மடல்

16. கொடையில் சிறந்தவன் கர்ணன். இங்கே வந்துள்ள இல் என்பது
1) இரண்டாம் வேற்றுமை 2) மூன்றாம் வேற்றுமை 3) ஐந்தாம் வேற்றுமை 4) ஏழாம் வேற்றுமை

17. அதிக வேற்றுமை உருபுகளைக் கொண்டமைந்த வேற்றுமை
1) ஏழாம் வேற்றுமை 2) ஆறாம் வேற்றுமை 3) முதலாம் வேற்றுமை 4) நான்காம் வேற்றுமை

18. நாவினால் சுட்ட வடு. இங்கே வந்த ஆல் உருபு உணர்த்தி நிற்பது
1) உடன்நிகழ்ச்சி 2) கருத்தா 3) கோடற்பொருள் 4) கருவி

19. அழைப்பிதழ் ஒன்றில் உள்ளடங்காத விடயம்
1) தலைப்பு 2) இடம் 3) உள்முகவரி 4) விளிப்பு

20. அவன் கரடுமுரடான பாதையில் நடந்தான். இங்கு கரடுமுரடு என்பது
1) இரட்டைக்கிழவி 2) இணைமொழி 3) அடுக்குத்தொடர் 4) அடுக்கிடுக்குத்தொடர்

21. "அவசரக்குடுக்கை" என்ற மரபுத்தொடரின் பொருள்
1) அவசரப்படுதல் 2) ஆரவாரம் செய்தல் 3) பதற்றக்காரன் 4) பயப்படுபவன்

22. பின்வருவனவற்றுள் எழுத்துப்பிழையுள்ள சொல்
1) செயப்படுபொருள் 2) கலாசாரம் 3) நிறுத்தல் குறிகள் 4) பிரச்சினை

23. வெயிலெல்லாம் மறைத்தது மேகம். இதில் வந்துள்ள எழுவாய்
1) எல்லாம் 2) மறைத்தது 3) மேகம் 4) வெயில்

24. தேர் செலுத்துபவன் சாரதி என்பது போல விமானம் செலுத்துபவன்
1) பாகன் 2) மீகாமன் 3) வலவன் 4) ஆயன்

25. விவசாயிகள் மிகக் கடுமையாக.............
1) உழைப்பான் 2) உழைத்தான் 3) உழைக்கின்றனர் 4) உழைக்கின்றான்

26. தென்றல் காற்று................. என சாளரத்தின் வழி வந்தது
1) குளுகுளு 2) கமகம 3) குபுகுபு 4) கடுகடு

27. பெயர் + விகுதி என்ற அமைப்பைக் கொண்டமைந்த பெயர்
1) தொழிற்பெயர் 2) கூட்டுப்பெயர் 3) ஆக்கப் பெயர் 4) காரணப் பெயர்

28. "வறுமையிலும் செம்மையாக வாழ்" என்ற கருத்தைத் தரும் பழமொழி
1) ஆறிலும் சாவு நூறிலும் சாவு
2) அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது
3) இரக்கப் போனாலும் சிறக்கப் போ
4) அலைமோதும் போதே தலை முழுகு

29. கோடு கொண்ட யானை அரணை உடைத்து தாக்கியது. இதில் **கோடு** என்பது
1) தந்தம் 2) வரி 3) வளைவு 4) ஊதுகொம்பு

30. பின்வரும் வாக்கியங்களைக் கருத்தமைவுள்ள பந்தியாக்குவதற்கான ஒழுங்குமுறை
அ. அத்தோடு அவன் முகம் வெயிலிற் காய்ந்து கருமையுற்று விளங்கும்
ஆ. பாம்பாட்டிகள் பாம்புக் கடிக்குரிய சிகிச்சையை நன்கு அறிந்திருக்கிறார்கள் என்பது உண்மையே.
இ. நாம் பாம்பாட்டியை இலகுவில் இனங்கண்டு கொள்ள முடியும்.
ஈ. ஆனால் மந்திரத்தினால் பாம்புகளைத் தீங்கு விளைவிக்காமற் செய்கின்றனரென்று எண்ணுவது தவறாகும்.
உ. அவனுடைய உடையும் தோற்றமும் ஏனைய மக்களுடைய உடையிலும் தோற்றத்திலுமிருந்து வேறுபட்டிருக்கும்.

1) இ, ஈ, உ, அ, ஆ 2) இ, உ, ஈ, அ, ஆ 3) இ, உ, அ, ஆ, ஈ 4) இ, உ, அ, ஈ, ஆ

(30 x 1 = 30 புள்ளிகள்)


kalvi.lk

**பகுதி - II**

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றினைத் தெரிவு செய்து ஏறத்தாழ 200 சொற்களில் கட்டுரை எழுதுக.
   1) வாசிப்பின் முக்கியத்துவம்
   2) நான் பறவையானால்......
   3) இயற்கையை நேசிப்போம்
   4) இன்றைய தொழில்நுட்பமும் எதிர்கால வாழ்வும் (20 புள்ளிகள்)

02. பின்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிவு செய்து 75 சொற்களில் அமையுமாறு எழுதுக.
உமது பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழா பற்றி விபரித்து நண்பனுக்கு ஓர் கடிதம் எழுதுக.
அல்லது
உமது பாடசாலையில் நடைபெறவுள்ள தமிழ்மொழித்தின விழாவுக்கான அழைப்பிதழ் ஒன்றை வடிவமைக்குக. (10 புள்ளிகள்)

03. பின்வரும் கூற்றுக்கள் யாரால் யாருக்குக் கூறப்பட்டது என எழுதுக.
   அ. "இந்த மல்லிகை மொட்டுக்களைப் பறித்து அழகான இரு மாலைகள் தொடுத்து வை"
   ஆ. "உட்காருங்க, வாழைப்பழம் இப்ப வந்திடும் சாப்பிடலாம்"
   இ. "இதில் கெட, இல்லாட்டி உன்னை கொண்டு போடுவன்"
   ஈ. "முன்பு இடி இடித்தது, இப்போது மழை பெய்கிறது"
   உ. "ஐயா, சற்று நில்லுங்கள். பிச்சை போட்டிருந்தீர்களேயானால் அந்த அரிசி யாருக்குச் சொந்தம்? (5 x 2 = 10 புள்ளிகள்)

04. பாடநூலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.
   அ. எண்ணங்களின் வகைகள் எவை?
   ஆ. தலைமைத்துவம் பற்றி கலிபா உமர் (றழி) அவர்களின் கருத்து யாது?
   இ. உண்மைக்குப் பரிசு என்ற கதையில் வந்த மகளின் பண்புகள் எவை?
   ஈ. பூச்சியின் இலட்சியமாகக் கதாசிரியர் குறிப்பிடுவது எதனை?
   உ. ஆசிரியர் குறித்த மாணவனை அடிப்பதற்குக் காரணம் யாது?
   ஊ. உழைக்கும் மக்கள் குடும்பங்களின் சீதனப் பொருள்கள் எவை?
   எ. ரோசாவின் கர்வத்துக்கான காரணம் யாது?
   ஏ. இலங்கைத் தீவினைச் சுற்றிப் பார்த்த வெளிநாட்டவர்களின் கருத்துக்கள் எவை?
   ஐ. ஆக்கப் பெயர் என்றால் என்ன?
   ஒ. வேற்றுமை என்றால் என்ன? (10 x 2 = 20 புள்ளிகள்)

05. பின்வரும் சொற்களை வைத்து கருத்து புலப்படுமாறு வாக்கியம் அமைக்குக.
   அ. அன்னம்
   ஆ. அண்ணம்
   இ. பொரி
   ஈ. பொறி
   உ. கலை
   ஊ. களை (6 x 1 = 6 புள்ளிகள்)

06. பின்வரும் பந்தியிலுள்ள வழுக்களை திருத்தி எழுதுக.
மளை அடிவாரத்தில் சில மைல் தூறம் சமதரையில் நடந்து சென்ற நாம், சாய்வான பகுதியில் படிக்கட்டுக்களின் வலியாக மேலே எட்டி ஏரி நடந்தோம்.
(4 புள்ளிகள்)


kalvi.lk

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION I PAPER DISCUSSION**

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.

JOIN NOW

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457